விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 091 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 06 வியாழக்கிழமை (20.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


பூமிக்குத் திரும்பினார் வீரமங்கை சுனிதா
8ஆம் பக்கம் பார்க்க

தமிழர்கள் மீதான வன்முறைகள் தொடர்பில்

# நீதியான விசாரணை முன்னெடுக்க வேண்டும்

## சபையில் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

தமிழர்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு



03ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலுக்கான திகதி இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி இன்று அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதி நிறைவடைந்துள்ளது.

அதேநேரம் வேட்புமனுக்கள் இன்று நண்பகல் 12 மணிவரை 15ஆம் பக்கம் பார்க்க

களனி பல்கலைக்கழகத்தின்

## உளவியல் துறை பீடாதிபதி விபத்தில் உயிரிழப்பு



(கம்பஹா)

கண்டி மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விபத்தில், களனிப் பல்கலைக் கழகத்தின் உளவியல் பீடத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என்.டி. குணேந்திர கயந்த (வயது-46)உயிரி 15ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றில் சரணடைந்தார் தென்னகோன் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவு



(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்த நிலையில் அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வெலிகம - பெலேன பகுதியில் 2023ஆம் ஆண்டு விருந்தகம் ஒன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக தேசபந்து தென்னகோனுக்கு எதிராக மாத்தறை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

குறித்த வழக்கானது இன்று விசாரணைக்கு 15ஆம் பக்கம் பார்க்க

அர்ச்சுனா எம்.பியின் உரைகளை

## மே 8வரை நேரடியாக ஒளிபரப்புவதற்குத் தடை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் உரைகளை மே 8ஆம் திகதி வரை நேரடியாக ஒளிபரப்புவதற்குத் தடை விதிக்கப்படும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா ஆற்றிய சர்ச்சைக்குரிய உரைகள் 15ஆம் பக்கம் பார்க்க

## மருதனார்மடத்தில் வீதி விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரைத் தாக்கிவிட்டு சந்தேக நபர் தப்பிப்பு

தெல்லிப்பழையில் சம்பவம்

(தெல்லிப்பழை)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் பொலிஸாரைத் தாக்கிவிட்டு சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தேகநபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க





நடுவு நிலை தவறாது நீதியைக் காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 05 - 1953



இறப்பு
19 - 03 - 2025

## கந்தையா சுந்தரலிங்கம்

கரந்தன், நீர்வேலி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (19.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் விஜயலட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோகிலன் (Smart Rigel Energy (PVT) Ltd Water Solution), லக்சிகா (ஆசிரியை - மு/பாரதி மகா வித்தியாலயம்), கபிலன், யகுலன் (Falcon drafting) ஆகியோரின் அன்புத் தந்தையும் நேருகா, சுஜன் (புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் சபினேஸ், சபினாஸ், சயனிக்கா, கபிஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (20.03.2025) வியாழக்கிழமை கரந்தன், நீர்வேலியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் மு.ப 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(3696)

தகவல்:
குடும்பத்தினர்

## வேலை நிறுத்தத்தை ஏற்க முடியாது - ஜனாதிபதி

தொழிற்சங்கங்களின் கோரிக் கையோ அழுத்தமோ இன்றி வர லாற்றில் அரசாங்கமொன்றினால் மிகக் கூடிய சம்பள அதிகரிப்பு வழங் கப்பட்டுள்ள நிலையில் சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத் தத்தில் ஈடுபடுவதை ஏற்க முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க மற்றும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவல கத்தில் நடைபெற்ற போது இதனை குறிப்பிட்டுள்ளார்.

வரையறுக்கப்பட்ட செலவுகளுக்கு உட்பட்டிருக்கும் தற்போதைய பொரு ளாதார நிலையிலும் கூட, அரச சேவையை வினைத் திறனாக ஈடுபடுத் தல், தகைமையுள்ள நபர்களை அரச சேவைக்கு ஈர்த்துக் கொள்ளல் மற்றும் அரச சேவையை ஊக் குவிப்பதற்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழி யர்களின் அடிப் படைச் சம்பளத்தை அதிகரிப் பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திய தாகவும் ஜனாதி பதி இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


### வேலையாட்கள் தேவை

அனுபவம் வாய்ந்த வெல்டிங் வேலையாட்கள் தேவை.
இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 077 592 5088
076 997 8857

(3701)


### தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

FWC

**2022, 2023 வருடங்களுக்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதன்மைச் சித்தி பெற்ற மாணவரைக் கௌரவித்தல்**

மேற்படி வருடங்களில் நடைபெற்ற பரீட்சையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம், கலை, பொறியியல் தொழில்நுட்பம், உயிர்முறைமைத் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் தோற்றி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களை கௌரவிப்பதற்கு தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் தீர்மானித்துள்ளது.

தகுதியுள்ள மாணவர்கள் 077 704 4120 என்ற WhatsApp இலக்கத்திற்கு தங்கள் மாவட்ட முதல்நிலை சான்றிதழ் பிரதியையும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் 30.03.2025 இற்கு முன்னர் அனுப்பி உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆ.கதிர்காமநாதன்
செயலாளர்

(3697)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 2025.02.18 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் ஐயாத்துரை அழகதுரை



தோற்றம்
1950.11.11

மறைவு
2025.02.18

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 2025.03.20 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
076 057 3054, 077 967 2649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பட்டமளிப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று ஆரம்பமாகியது.

மரபார்ந்த பண்பாட்டு அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் பீடாதிபதிகள் அணிவகுத்து வர, கொடி, குடை, ஆலவட்டங்கள் சகிதம் விழா அரங்குக்கு வருகை தந்த துணைவேந்தர் அமர்வுகளுக்குத் தலைமை தாங்கிப் பட்டங்களையும், பரிசில்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

நேற்று முதல் எதிர் வரும் 22 ஆம் திகதி வரை 13 அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் மூவாயிரத்து 920 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர். (நி-8)

# பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய 29 சதவீதமான மாணவர்கள்!

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**இலங்கையிலுள்ள 3.5 மில்லியன் இளம் தலைமுறையினரில் 29 வீத பாடசாலை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை இடை நிறுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

2024 உலகளாவிய பாடசாலைகளை அடிப்படையாக கொண்ட மாணவர் சுகாதார ஆய்வறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

71 வீதமானோர் பாடசாலைக்கு செல்வதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 40 அரச பாடசாலைகளில் தரம் 8 முதல் 12 வரையிலான 3,843 மாணவர்களை இணைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 17.7 வீதமானோர் ஆரோக்கியமற்ற பானங்களை அருந்துவதுடன் இவர்களில் பெரும்பாலானோர் ஆண் மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 28 வீத மாணவர்கள் நாளாந்தம் சீனி கலந்த பானங்களை அருந்துவதுடன் 28.5 வீத மாணவர்கள் உப்பு கலந்த சிற்றுண்டிகளை பெற்றுக் கொள்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தவிர 29.3 வீதமானோர் அதிக எண்ணெய் கலந்த உணவை பெற்றுக் கொள்வதுடன் 40.9 வீத மாணவர்கள் நாளாந்தம் அதிக சீனி கலந்த உணவுகளை உட்கொள்வதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆண், பெண் மற்றும் வயதுக்கமைய ஒரு சிகரெட் அல்லது இரண்டு சிகரெட்டுக்களை பயன்படுத்திய அல்லது பயன்படுத்த முயற்சித்த மாணவர்களின் எண்ணிக்கை 12.8 வீதமாக பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த சுகாதார ஆய்வறிக்கையானது சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதியமைச்சர் ஹன்சக விஜேமுனி தலைமையில் சர்வதேச பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)

## அடையாள வேலை நிறுத்த

# போராட்டத்தில் குதித்த இராமேஸ்வர மீனவர்கள்



(சென்னை)

இலங்கையில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்கக் கோரி இராமேஸ்வர மீனவர்கள் நேற்று அடையாள போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் 560 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப் பட்டுள்ளன. 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இலங்கை கடற்படையினரின் தொடர் கைது காரண மாக இராமேஸ்வரத்தில் மீன்பிடித் தொழில் முழுமையாக முடங்கி விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பல ஆயிரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 - 12 - 1978 |  | 19 - 03 - 2025 |

**அமரர்.செல்வி. யாழினி நடராசா**

(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்–பிரதேச செயலகம் பளை)

ஈஸ்வரம்ஸ் அல்வாய் கிழக்கு அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யாழினி நடராசா அவர்கள் 2025.03.19 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை நடராசா (மேனாள் அதிபர் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி) ஈஸ்வரதேவி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் சாளினி, இளங்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாநிதி. தி.கேதீசன், கிருத்திகா ஆகியோரின் மைத்துனியும் கஜலக்ஸ்சன், புவினா ஆகியோரின் சித்தியும் அவனேஸ், மீனாட்சி, ஆரணா ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற ஈஸ்வரதாசன் மற்றும் ஈஸ்வரமோகன், குகேஸ்வரன், கோகுலேஸ்வரன், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மருமகளும் சரோஜினி, தயாரஞ்சினி காலஞ்சென்றவர்களான குணசிங்கராசா, அருணகிரிராசா, சிவராசா மற்றும் தவராசா, செல்வராசா, சண்முகராசா ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2025.03.20 இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்வாய் கிழக்கு, (C-2497) தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.எஸ்.கே- மும்பை போட்டி டிக்கெட்டுக்கு கடும் கிராக்கி

## ரசிகர்கள் கவலை




விற்பனை தொடங்கிய சில நிமிடங்களிலேயே சி.எஸ்கே- மும்பை போட்டிக்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்ததால் கிரிக்கெட் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

18 ஆவது ஐ.பி.எல் தொடரில் முதலாவது போட்டி நாளை மறுதினம் கொல்கத்தாவின் ஈடன் காடன் மைதானத்தில் நடக்கவிருக்கிறது. முதல் போட்டியில் கொல்கத்தா மற்றும் பெங்களூரு அணிகள் மோதவிருக்கின்றன.

சென்னையில் மார்ச் 23 இல் நடைபெறும் இரண்டாவது போட்டியில், சி.எஸ்.கே அணியும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில், இந்தப்போட்டிக்கான டிக்கெட் விற்பனை நேற்றுக் காலை தொடங்கியது.

காலை 10.15 மணி முதல் தொடங்கிய டிக்கெட் விற்பனை சில நிமிடங்களிலேயே விற்றுத் தீர்ந்ததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

38 ஆயிரம் இருக்கைகள் கொண்ட சேப்பாக்கம் மைதானத்துக்கான டிக்கெட் வரிசை 2 இலட்சத்துக்கும் அதிகமாக இருப்பதால் இந்த முறை போட்டியை நேரில் காண முடியாது என சமூக வலைத்தளங்களில் புலம்பி வருகின்றனர். அதுமட்டுமின்றி, பல்வேறு சட்டத்துக்கு புறம்பான தளங்களில் டிக்கெட்டுகள் விற்கப்படுவதாகவும் அதிக விலைக்கு கள்ளச் சந்தையிலும் டிக்கெட்டுகள் விற்கப்படுவதாகவும் ரசிகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (6-8)

# போட்டியை தவறவிட்ட ஹர்த்திக் தலைமை தாங்கும் சூரியகுமார்

2025 இந்தியன் பிரீமியர் லீக் ஐ.பி.எல் தொடரின் முதல் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை சூர்யகுமார் யாதவ் வழிநடத்துவார்.


அணியின் வழக்கமான தலைவர் ஹர்திக் பாண்டியா கடந்த சீசனில் மும்பையின் இறுதி ஐ.பி.எல். ஆட்டத்தில் ஒரு போட்டித் தடையை எதிர் கொண்டார்.


அதனால், முதல் போட்டியின் தலைவராக சூர்யகுமார் யாதவ் அணியை வழிநடத்தவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்னையில் சி.எஸ்.கே அணிக்கு எதிராக மும்பை அணி விளையாடவுள்ளது.


2024 ஐ.பி.எல் சீசனின் கடைசி லீக் ஆட்டத்தில், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில், மும்பை அணியின் மெதுவான ஓவர் ரேட் காரணமாக பாண்டியாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அந்த சீசனில் அவர் செய்த மூன்றாவது தவறு இது என்பதால், அடுத்த ஐ.பி.எல். ஆட்டத்தில் ஒரு போட்டி இடைநீக்கமும் 30 இலட்சம் இந்திய ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)





# சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடிய நியூசி. பிரதமர்



டில்லியில் சிறுவர்களுடன் இணைந்து நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் மற்றும் நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் ராஸ் டெய்லர் இருவரும் கிரிக்கெட் விளையாடிய புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றது.


நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் 5 நாள்கள் அரசு முறை பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா வந்தார்.

இந்த நிலையில், டில்லியின் தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாட்டில் அதிக ஆர்வமிக்க லக்ஸனும் இணைந்து விளையாடினார்.

அவருடன் ராஸ் டெய்லர், இந்திய வம்சாவளி நியூசிலாந்து பந்து வீச்சாளர் அஜாஸ் பட்டேல், இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ் ஆகியோரும் கலந்து கொண்டு சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடினர்.

இதுபற்றி நியூசிலாந்து பிரதமர் லக்ஸன் தன்னுடைய எக்ஸ் தளப்பதிவில், "கிரிக்கெட் மீதான அன்பை விட வேறு எதுவும் நியூசிலாந்து மற்றும் இந்தியாவை ஒன்றிணைக்கவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். (6-8)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 17.01.1940

இறப்பு 31.03.2024

அமரர்

### கணேசரத்தினம் சரஸ்வதி

திதி - ஷஷ்டி

உள்ளத்தில் உறைந்திருக்கும் உங்கள்
தெய்வீக குரல் ஓசை
இல்லத்தில் குலதெய்வமாய் குடியிருக்கும் அம்மா...
வழிகாட்டி நின்ற தெய்வம்
வானுயர்ந்த தெய்வமாகி வருடம் ஒன்றானது அம்மா...
உங்கள் வழித்தடத்தில் வாழ்ந்திடுவோம்
சாந்தியாய் உறங்கிடம்மா.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துர்க்கா ஸ்ரோர்ஸ்,
ஏழாலை தெற்கு, சுன்னாகம் (938)

குடும்பத்தினர்
077 614 1764

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகர்ப்பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சிறிய கடை ஒன்றிற்கு 18 - 45 வயதுக்கு இடைப்பட்ட ஆண் தேவை.

பட்டா ரக வாகனம் விற்பனைக்குண்டு.

077 576 8321 (3702)

## பெயர் மாற்ற அறிவித்தல்


கட்டைக்காடு முள்ளியான் முகவரியைச் சேர்ந்த கிருஸ்ணன் இராமநாதன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை கிருஸ்ணன் சஞ்ஜை என மாற்றிக் கொண்டுள்ளேன். இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக [illegible]ற்கும் மக்களிற்கும் அறியத்தருகின்றேன்.

- கிருஸ்ணன் சஞ்ஜை (C-2502)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்து வீட்டில் மீட்கப்பட்ட மதுப்போத்தல்கள்

## பாதுகாப்பு அமைச்சர் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

நீதிமன்றில் சரணடைந்த தேசபந்து தென்னகோனின் வீட்டில் இருந்து சுமார் 1009 மதுபானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தேசபந்து தென்னகோன் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இதன்போதே மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார். நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒரு குழு ஹோகந்தர பகுதியில் உள்ள தேசபந்து தென்னகோனின் வீட்டை ஆய்வு செய்த போது அங்கு 1009 மதுபான போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதில் 795 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் 214 மது போத்தல்கள் உள்ளடங்குவதாகவும் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன் அவரது துப்பாக்கி என்று சந்தேகிக்கப்படும் ஒரு பிஸ்டலையும், வீட்டிலிருந்த இரண்டு நவீன கையடக்க தொலைபேசிகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்ததாக விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக்கையடக்க தொலைபேசிகள் மூலம் அதிக அளவிலான தகவல்களை வெளிக்கொணர முடியும் என்றும் அமைச்சர் பாராளுமன்றத்தில் விளக்கியுள்ளார்.

எதிர்காலத்தில் இந்த விடயம் குறித்து நீதிமன்றங்களுக்கு அறிக்கை அளிப்பதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# மதுபானப் போத்தல்களுடன் கவிழ்ந்த பாரவூர்தி



(கொழும்பு)

கொழும்பு- இரத்தினபுரி பிரதான வீதியில் எஹெலியகொட பகுதியில் மதுபான போத்தல்களை ஏற்றிச் சென்ற கொள்கலன் பாரவூர்தி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டிருந்தது.

வளைவு ஒன்றில் வேகமாக சென்ற போது கொள்கலன் பாரவூர்தி கவிழ்ந்ததாகக் கூறப்படும் நிலையில் ஏராளமான மதுபானப் போத்தல்கள் சாலையில் விழுந்து நொருங்கி உள்ளன. (நி-8)

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஜேர்மன் பெண்

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அந்தப் பெண் இலங்கை குடியுரிமையைப் பெற்று தேர்தலில் போட்டியிட தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் பெண் ஒரு சுயேட்சைக் குழுவின் வேட்பாளராக கலேவல பிரதேச சபைக்கு போட்டியிட உள்ளார்.

வைப்புத்தொகையை செலுத்திய பின்னர், இலங்கையில் மாற்றங்களைக் கொண்டு வரும் நம்பிக்கையுடன் தான் போட்டியிடுவதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (நி-8)

# எதிர்பார்த்ததை விட அதிகரிக்கும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

## ப்ளூம் பெர்க் அறிக்கை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வேகமாக வளர்ந்தது. இது சர்வதேச நாணய நிதியத்தின் உதவி யுடன் வலுவான உள்நாட்டு செயற்பாட்டைக் குறிப்பதாக ப்ளூம் பெர்க் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

2024 டிசம்பர் வரையிலான மூன்று மாதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4 சதவீதம் உயர்ந்துள்ளதாக புள்ளிவிபரத் துறை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இது ப்ளூம்பெர்க் கணக்கெடுப்பில் பொருளாதார வல்லுநர்களால் கணிக்கப்பட்ட 5.3 சதவீத விரிவாக்கத்தை விட அதிகமாகும்.

முழு ஆண்டிலும், பொருளாதாரம் 5 சதவீதம் விரிவடைந்தது, முந்தைய ஆண்டு 2.3 சதவீத சுருக்கத்திலிருந்து மீண்டது.

2022 ஆம் ஆண்டில் முன் னெப்போதும் இல்லாத அளவுக் குக் கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குப் பின்னர், இலங்கை ஒரு திருப்புமுனையைத் தழுவியுள்ளது. 2025 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி சுமார் 5 சதவீதம் ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இராசிபலன்

20.03.2025
பங்குனி 06, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.50 மணிவரை

அனுசம் முன்னிரவு 8.50 மணிவரை
சுபநேரம் 7.48-9.18 மணிவரை
இராகுகாலம்-1.48-3.18 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி

வளவன்


மேஷம்

கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.


ரிஷபம்

நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


மிதுனம்

வியாபார விருத்தியுண்டு, கனவுப்பலிதமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


சிம்மம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


கன்னி

எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.


விருச்சிகம்

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பயணங்களால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.


கும்பம்

நண்பர்கள் உங்களின் முயற்சிக்கும் பக்கபலமாக இருப்பர், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும்.

**பணிவுள்ள இதயம் எல்லோருடைய அன்பையும் பெறும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரீடா சக்தி

# கூடைப்பந்தாட்ட அணியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை கீரீடா சக்தி கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட அணியைச் சேர்ந்த 4 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 28.02.2025 அன்று கொழும்பு புளூஸ் கூடைப்பந்தாட்ட திடலில் இத் தெரிவு இடம்பெற்றது. இதில் யாழ்.திருக் குடும்ப கன்னியர் மட அணியைச் சேர்ந்த சகானா விஜருபன், எஸ்தார் ஜாக்சன், டிலான் காசில்டா, ஆர். லோட்சி ஆகிய 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றி சாதனை படைத்தனர்.

இவர்களுக்கான பயிற்சிகளைபயிற்றுவிப்பாளர் சோபனா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)




இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் வட மாகாண அலுவலக கேட்போர் கூடத்தில் தலைவர் வி.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மூத்த ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# இந்திய மீனவர்களில் இருவருக்கு 6 மாத சிறை; 4 பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 20 ஆம் திகதி நெடுந்தீவு கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 6 இந்திய மீனவர்களில் 4 பேருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறை தண்டனை வழங்கி ஊர்காவற்றுறை நீதவான் நிபந்தனையுடன் விடுதலை செய்தார்.

குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் 6 பேரில் 4 பேருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறை தண்டனை வழங்கி நிபந்தனையுடன் விடுதலை செய்தார்.

இந்த 6 பேரில் இருவர் படகோட்டிகள் என்பதால் அந்நபர்களுக்கு ஆறுமாத கடூழிய சிறைத்தண்டனை வழங்கி உத்தரவிடப்பட்டிருந்தது.

அத்துடன் படகோட்டிகள் இருவருக்கும் தலா நான்கு மில்லியன் ரூபா அபராத தொகையும் விதிக்கப்பட்டது.

இதனை செலுத்த தவறின் மேலும் 3 மாத சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டிருந்தார். (6-8)

# யாழில் வேட்பு மனுவினை தாக்கல் செய்த தமிழ் காங்கிரஸ்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் நேற்று தாக்கல் செய்துள்ளது.

அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இந்த வேட்பு மனுக்கள் நேற்று மாலை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது பல்வேறு கட்சிகளையும் இணைத்து புதிய ஒரு கூட்டணியாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் வடக்கு கிழக்கு முழுவதும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வருஷப்புலம் பூந்தோட்ட ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் (2025) நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவங்கள் நடைபெற உள்ளது.

இறுதி நாளாகிய எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வைரவப் பெருமானுக்கு 108 சங்குகளால் அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் இடம்பெறும். அதன்பின் மாலை நிகழ்வாக வைரவப் பெருமானின் திருவூஞ்சல் நடைபெற்று திருவீதியுலாவுடன் நிறைவு பெறும் என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

# கட்டுப்பணம் செலுத்த கால அவகாசம் நீட்டிப்பு

## பூநகரி உள்ளிட்ட 3 பிரதேச சபைகளுக்கு

பூநகரி பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை குறித்த மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## டிபி லொஜிஸ்டிக்ஸ்

# பயனர் பண்டகசாலை மயிலிட்டியில் அங்குரார்ப்பணம்





(யாழ்ப்பாணம்)

டேவிட் பீரிஸ் குழுமத்தின் அங்கத்துவ டிபி லொஜிஸ்டிக்ஸ் பிறைவட். லிமிடட் நிறுவனம் யாழில் முதன் முறையாக நிறுவவுள்ள பல் பயனர் DPL பண்டகசாலையின் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இல 202/21, கட்டுவன் மயிலிட்டி வீதி, காங்கேசன்துறையில் இடம்பெற்றது.

DPL நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கெலும் கட்டம்பே ஆரச்சி, DPMC அசட்லைன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சமில்க அம்பகஹாவத்த ஆகியோர் அடிக்கல் நாட்டி வைத்ததுடன், டேவிட் பீரிஸ் குழும நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த DPL நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கெலும் கட்டம்பே ஆரச்சி, வடக்கு பகுதியில் அமைக்கப்படவுள்ள முதலாவது பல்பயனர் பண்டகசாலையாக இது அமையவுள்ளது.

விமானநிலையம், துறைமுகம் மற்றும் பிரதான வணிக மையங்களுக்கு மிகவும் அருகாமையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தப் பண்டகசாலை அமையவிருப்பதால் பிராந்தியத்திற்கான பெறுமதிமிக்க முதலீடாக இது காணப்படுவதாக குறிப்பிட்டார். (6-8)

# "பொன்மணி" திரைப்படக்காட்சி தந்தை செல்வா கலையரங்கில்

(யாழ்ப்பாணம்)

1977 ஆம் ஆண்டில் யாழில் தர்மசேன பத்திராக நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "பொன்மணி" திரைப்படம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் திரையிடப்படவுள்ளது.

யாழ். திரைப்படக்கழகத்தினரின் ஏற்பாட்டில் அண்மையில் மறைந்த நாடகவியலாளர் குழந்தை ம.சண்முகலிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இத் திரைப்படம் இலவசக் காட்சியாக திரையிடப்படவுள்ளது.

இத் திரைப்படத்தில், குடும்பப் பாரத்தைச் சுமக்க நேரும் சராசரி யாழ். இளைஞன் பாத்திரத்தில், குழந்தை ம.சண்முகலிங்கம் சிறப்புற நடித்துள்ளார். யாழ்.சமூகத்தில் நிலவும் சீதனப்பிரச்சினை, சாதி / மத வேறுபாடுகளை மையமாகக் கொண்டதாகத் திரைப்படக் கதை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதமர் மோடி இலங்கை செல்லக் கூடாது

## வைகோ வலியுறுத்து

**(டில்லி)**

**இலங்கை கடற்படை இந்திய மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டுக்குச் செல்லக்கூடாது என மாநிலங்களவையில் வைகோ வலியுறுத்தினார்.**

இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய வைகோ “கடந்த 40 ஆண்டுகளில் 843 மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். ஜனவரி 25 ஆம் திகதி முதல் 45 நாட்களில் பல்வேறு தாக்குதல்களை இலங்கை கடற்படை நடத்தி இருக்கிறது.

ஜனவரி 25 அன்று 3 படகுகளில் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. எல்லை தாண்டி மீன் பிடித்ததாக அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணச் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பெப்ரவரி 2 ஆம் திகதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஏராளமான படகுகளில் மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்களில் 10 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து அவர்களின் படகையும் பறிமுதல் செய்தது. பெப். 19 ஆம் திகதி இலங்கை கடற்படை 42 இந்திய மீனவர்களை கைது செய்தது.

இலங்கை கடற்படையின் மனிதநேயமற்ற இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது மீன்படி தொழிலை அழிக்க இலங்கை கடற்படை விரும்புகிறது. நமது கடற்படை அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறது? நாங்கள் இந்திய அரசுக்கு வரி செலுத்துகிறோம். தமிழக மீனவர்கள் என்ன அநாதைகளா?

நமது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்குச் சென்று அந்நாட்டின் ஆட்சியாளர்களைச் சந்தித்தார்.

நமது வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரும் அதேபோல் சந்தித்தார். ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தற்போது என்ன காரணத்துக்காக நமது பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்கிறார்? இலங்கை அரசுக்கும் அதன் கடற்படைக்கும் கண்டனம் தெரிவிக்கப் போகிறாரா? இன்றும் கூட இராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் இந்திய அரசிடம் நீதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமரை சந்தித்து இது தொடர்பாக பேசி இருக்கிறார். வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசி இருக்கிறார். பலமுறை கடிதம் எழுதி இருக்கிறார். அவை அனைத்துமே குப்பைத் தொட்டியில் போடப்பட்டு விட்டன .

இதுதான் இந்திய அரசு தமிழக மீனவர்களை இந்திய குடிமக்களை நடத்தும் விதமா? இனிமேலாவது நீங்கள் அங்கே செல்லாதீர்கள் அவர்களை இங்கே வரவழையுங்கள்.

இந்திய கடற்படை ஒரு முறையாவது ஒரு துப்பாக்கிச் சூட்டையாவது நடத்தி இருக்கிறதா? இவ்விடயத்தில் இந்திய கடற்படையும் இலங்கை கடற்படையும் இணைந்து செயற்படுகிறார்கள்.

இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. மொத்த தமிழகமும் இந்திய அரசால் கைவிடப்பட்டது போல் உணர்கிறது என தெரிவித்தார். (நி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1997 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'9"
தகைமை/ தொழில்: BTech,PropertyAdministrator (Canada)
எதிர்பார்ப்பு : கனடா PR உள்ளவர்
தொ.இ: B/15236

பிறப்பு: 1999 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கிபா: 25 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L,AC REPAIRING
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15237

பிறப்பு:1985 - இந்து
நட்சத்திரம் : உத்தராடம்
2இல் செவ்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Cake Maker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15238

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 - இந்து
நட்சத்திரம் : பூராடம்
கிபா: 53 1 இல் செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L,வெளிநாடு
தொ.இ: G/15252

பிறப்பு:2000 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் - HNDA,Bank Staff
எதிர்பார்ப்பு- : அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15253

பிறப்பு : 1996 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
8 இல் செவ்
கி.பா: 68 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA,MA,Project Assistant
எதிர்பார்ப்பு : அரச தொழில்
தொ.இ: G/15260

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வேட்புமனுக்களை ஏற்பது இன்றுடன் நிறைவு

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணம் செலுத்தும் காலம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது. கட்டுப் பணம் செலுத்தும் நடவடிக்கை கடந்த 3ஆம் திகதி தொடங்கியதாகவும், எக் காரணம் கொண்டும் இந்த இறுதி தினம் நீடிக்கப்படாது என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தை ஏற்றுக் கொள்வதற்காக மாவட்டச் செயலக அலுவலகங்களில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடையவுள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமானது. அதன்படி, இன்று நண்பகல் 12 மணி முதல் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க ஒன்றரை மணி நேரம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் பிறகு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவுள்ளது. (நி-8)


## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
## தரம் 6 அனுமதி தொடர்பான அறிவித்தல்-2025

கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டிற்கான தரம் 6 மாணவர் அனுமதி 28.03.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கீழ்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

- காலை 9.00மணிக்கு- 158 உம் அதற்கு மேல் புள்ளி பெற்றவர்களுக்கும்.
- காலை 11.00மணிக்கு - 149-157 இற்கு இடையில் புள்ளி பெற்றவர்களுக்கும்.

அனுமதியை மேற்கொள்வதற்கு உரிய ஆவணங்களுடன் உரிய நேரத்திற்கு பெற்றோர் மட்டும் வருகை தந்து அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திருமதி.பி. சுகுமார்,
பதில் அதிபர்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
(சி-2496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# விண் தொட்ட வீராங்கனை நேற்று மண் தொட்டார்!

(வோஷிங்டன்)

**விண்வெளியில் உள்ள ஐ.எஸ்.எஸ்., எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களாக இருந்த சுனிதா வில்லியம்ஸ் (59), மற்றும் புட்ச் வில்மோர் (62), நேற்று அதிகாலை பூமிக்கு திரும்பினர்.**



அவர்களை சுமந்துள்ள "ஸ்பேஸ்எக்ஸ்" நிறுவனத்தின் "டிராகன்" விண்கலம் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா அருகே பத்திரமாகக் கடலில் தரை இறங்கியது. மீட்புப்படையினர் அவர்களை பத்திரமாக மீட்டனர்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் புட்ச் வில்மோர், கடந்தாண்டு ஜூன் 5ஆம் திகதி, சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர். விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும், "போயிங்" நிறுவனத்தின், முதல் விண்கலமான "ஸ்டார்லைனர்" வாயிலாக இவர்கள் சென்றனர். அங்கு எட்டு நாட்கள் ஆய்வுப் பணிகளில் ஈடுபட திட்டமிட்டனர்.

இந்நிலையில், ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், அதன் வாயிலாக அவர்களால் பூமிக்கு திரும்ப முடியவில்லை. போயிங் நிறுவனத்துக்காக விருந்தாளியாக சென்ற அவர்கள், விண்வெளியில் சிக்கியதால் எப்போது பூமிக்கு திரும்புவர் என்ற கேள்வி எழுந்தது. அவர்களுடைய உடல்நிலை தொடர்பான கேள்விகளும் எழுந்தன. ஆனால், இருவரும் விண்வெளி மையத்தில் தங்கியிருந்த போது, தங்களுடைய பணிகளை மேற்கொண்டனர்.

பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், அவர்களை பூமிக்கு அழைத்து வர முடியவில்லை. இந்நிலையில், அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க்கின், "ஸ்பேஸ்எக்ஸ்" விண்வெளி நிறுவனத்தின் வாயிலாக மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, அந்த நிறுவனத்தின் "பால்கன் 9" ரொக்கெட் உடன், "டிராகன்" எனப்படும் வீரர்கள் பயணிக்கும் விண்கலம் அனுப்பப்பட்டது. இந்த விண்கலம், விண்ணில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்தை சமீபத்தில் சென்றடைந்தது. இதையடுத்து, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர், புறப்பட்டனர்.


அவர்களுடன், கடந்த சில மாதங்களாக அங்கு பணியாற்றிய அமெரிக்க வீரர் நிக் ஹேக், ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் ஆகியோரும் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டனர். டிராகன் விண்கலத்தில் சென்ற, நான்கு விண்வெளி வீரர்கள், அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

இந்த விண்கலம் 17 மணி நேர பயணத்துக்குப் பின் நேற்று அதிகாலை 3.27 மணிக்கு, அமெரிக்காவின் புளோரிடா அருகே கடலில் தரையிறங்கியது. கடலில் விழுந்ததும் பந்து போல் மிதந்து வந்த விண்கலத்தில் இருந்து அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். பின்னர் அவர்கள் வழக்கமான மருத்துவப் பரிசோதனைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். வீரர்கள் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது, நாசா விஞ்ஞானிகளையும், மக்களையும் மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

சுனிதா வில்லியம்ஸ் பத்திரமாக பூமிக்கு திரும்பியதையடுத்து குஜராத்தில் உள்ள அவரது சொந்த ஊர்மக்கள், பட்டாசு வெடித்து உற்சாகமாக கொண்டாடினர். (நி-8)

## உங்களால் இந்தியா பெருமைப்படுகிறது

### சுனிதாவை வாழ்த்திய மோடி



(டில்லி)

சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து பூமிக்கு திரும்பும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது,

"இந்திய மக்களின் சார்பாக, உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று, புகழ்பெற்ற விண்வெளி வீரர் மைக் மாசிமினோவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது, உங்களைப் பற்றியும், உங்கள் சாதனைகளைப் பற்றியும் பேசினோம். எங்கள் உரையாடலின் தொடர்ச்சியாக, உங்களுக்கே நேரடியாக கடிதம் எழுதுகிறேன்.

நான் அமெரிக்காவுக்கு வந்தபோது, அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது, உங்கள் நலம் குறித்து விசாரித்தேன். 140 கோடி இந்தியர்களும் உங்கள் சாதனைகளால் பெருமைப்படுகின்றனர்.

நீங்கள் ஆயிரக் கணக்கான கிலோமீற்றர் தொலைவில் இருந்தாலும் எங்கள் இதயத்துக்கு நெருக்கமாகவே இருக்கிறீர்கள். உங்கள் பாதுகாப்பிற்கும் வெற்றிக்காகவும், இந்திய மக்கள் பிரார்த்தனை செய்கிறார்கள்.

பூமிக்கு திரும்பியவுடன், இந்தியாவில் உங்களை சந்திக்க ஆவலாக இருக்கிறோம். இந்தியா, தனது புகழ்பெற்ற மகள்களில் ஒருவரை வரவேற்கத் தயாராக உள்ளது. எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்! என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## கடலில் வி...

### சுனிதாவை வர...

(வோஷிங்டன்)

விண்வெளியில் உள்ள ஐ.எஸ்.எஸ்., எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் 9 மாதங்களாக இருந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் நேற்று அதிகாலை பூமிக்கு திரும்பினர். அவர்களை சுமந்துள்ள "ஸ்பேஸ்எக்ஸ்" நிறுவனத்தின் "டிராகன்" விண்கலம் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா அருகே பத்திரமாக கடலில் தரை இறங்கியது. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான போர் நிறுத்தத்திற்கு மறுப்புத் தெரிவித்த புடின்!

**(மொஸ்கோ)**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து, உக்ரைனில் உடனடி மற்றும் முழுமையான போர்நிறுத்தத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நிராகரித்துள்ளார்.**



எனினும், உக்ரைனின் எரிசக்தி நிலையங்கள் மீதான தாக்குதலை மாத்திரம் தற்காலிகமாக நிறுத்த இதன்போது ஒப்புக் கொண்டார்.

அண்மையில் சவுதி அரேபியாவில் உக்ரைனியர்களுடன் ட்ரம்பின் குழு இணைந்து மேற்கொண்ட ஒரு மாத கால விரிவான போர்நிறுத்தத்தில் கையெழுத்திட ரஷ்யத் தலைவர் மறுத்து விட்டார்.

உக்ரைனுடனான வெளிநாட்டு இராணுவ உதவி மற்றும் உளவுத்துறை பகிர்வு முடிவுக்கு வந்தால் மட்டுமே ஒரு விரிவான போர்நிறுத்தம் செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

மூன்று வருடங்களாக நடை பெற்று வரும் போரில், ஆறு மாதங்களுக்கு முன்பு உக்ரைனிய ஊடுருவலால் ஆக்கிரமிக்கப்பட்ட அதன் குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள பகுதியை ரஷ்யா மீட்டு வருகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ட்ரம்ப்-புடினின் தெலைபேசி அழைப்பின் முடிவுகள், ஒரு வாரத்திற்கு முன்பு இருந்த அமெரிக்க நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்குவதற்கு சமமானதாக பார்க்கப்படுகிறது.

இருப்பினும் இரு தலைவர்களும் மத்திய கிழக்கில் மேலும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக நடைபெறும் என்று ஒப்புக் கொண்டனர்.

இது தலைவர்கள் இடையேயான அழைப்பு முடிந்த சிறிது நேரத்திலேயே, கடந்த செவ்வாயன்று பின்லாந்தின் ஹெல்சின்கிக்கு அதிகாரபூர்வ விஜயம் மேற்கொண்ட உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, எரிசக்தி வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு மீதான தாக்குதல்களை 30 நாட்களுக்கு நிறுத்தும் திட்டத்தை தனது நாடு ஆதரிக்கும் என்று தெரிவித்தார்.

அதேநேரம், செவ்வாய்க்கிழமை இரவு ரஷ்யா 40 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவி, சுமியில் உள்ள ஒரு மருத்துவமனையையும், உக்ரைன் தலைநகரைச் சுற்றியுள்ள கெய்வ் பகுதி உட்பட பிற பகுதிகளையும் தாக்கியதாக அவர் கூறினார்.

அதேநேரம் உக்ரைன், ரஷ்ய எல்லைக்குள் ஆழமாக, எண்ணெய் மற்றும் எரிவாயு வசதிகள் மீது ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜெட்டாவில் ஒரு அமெரிக்கக் குழு உக்ரைனிய சகாக்களை சந்தித்தபோது, அவர்கள் நிலம், வான் மற்றும் கடல் முழுவதும் "உடனடி" 30 நாள் போர்நிறுத்தத்திற்கான தங்கள் முன்மொழிவை ஒப்புக்கொள்ளுமாறு கீவை வலியுறுத்தினர். ஆனால், செவ்வாயன்று ட்ரம்ப்-புடின் அழைப்பைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையின் அறிக்கையில் கீவ் உடனான அந்த ஒப்பந்தம் பற்றி எந்த புதிப்பிப்பு தகவலும் இல்லை. (நி-8)

# விழுந்த டிராகன்

## வ வரவேற்ற டொல்பின்கள்

கியது.

பரசூட் அவர்களின் கேப் சூலை கடலில் இறக்க, ஏற்கனவே அங்கு வந்திருந்த நாசா அதிகாரிகள், விண்கலத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் உட்பட 4 பேரையும் படகில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

பூமிக்கு திரும்பிய விண்வெளி வீரர்கள் 4 பேரும் உற்சாகத்துடன் கையசைத்தனர். தற்போது அவர்களால் நடக்க முடியவில்லை என்றாலும், ஒரு வாரத்தில் இயல்பு நிலைக்கு திரும்புவார்கள் எனச் சொல்லப்படுகிறது.


முன்னதாக, நால்வரும் பயணித்த டிராகன் கேப்சூல் படிப்படியாக வேகம் குறைந்து கடலில் விழுந்ததும், விண்வெளி வீரர்களை வரவேற்பது போல் கேப்சூலை சுற்றி டொல்பின்கள் சூழ்ந்தன.

விண்கலம் கடலில் விழுந்தபோது. அதைச் சுற்றி பல டொல்பின்கள் மேற்புறத்தில் நீந்திக் கொண்டிருந்தது [illegible] களில் தெளிவாக தெரிந்தது.

இதனை லைவ் செய்து கொண்டிருந்த நாசா விஞ்ஞானிகள் அது மீட்புக் குழுவுக்குக் கிடைத்த பெருமை என்று கூறினர்.

உலகளவில் பேசப்படும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். சுனிதாவின் தந்தையான அமெரிக்க விஞ்ஞானி தீபக் பாண்டியா, குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டவர்.

ஸ்லோவேனியா வம்சாவளியைச் சேர்ந்த போனிக்கு 3ஆவது மகளாக 1965இல் பிறந்தார் சுனிதா வில்லியம்ஸ். சிறு வயதிலேயே விண்ணில் பறக்க வேண்டுமென்ற ஆசை.




விண்வெளிக்கு சென்றனாளில் அது நனவானது.

அமெரிக்காவின் நீதம் என்ற இடத்தில் பள்ளிக் கல்வியும் புளோரிடாவில் பொறியியல் படிப்பையும் முடித்தார். அமெரிக்க கடற்படையில் விமானியாகச் சேர்ந்த சுனிதாவை 1998இல் நாசா அழைத்துக் கொண்டது.

சுனிதா விண்ணில் அதிக நேரம் விண்நடை மேற்கொண்டு சாதனை புரிந்தார். சுமார் 30 ஆண்டுகள் நாசா நடத்திய பல சோதனைகளில் சுனிதா வில்லியம்ஸ் சாதனைகள் படைத்தார். பூமி மேல் பறக்க வேண்டும் என்ற ஆசையை அவர் நிறைவு செய்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு இல்லையேல்
## பாரிய தொழிற்சங்க நடவடிக்கை
### எச்சரிக்கும் சுகாதார தொழிற்சங்கங்கள்



(கொழும்பு)

சுகாதார தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட அடையாள பணிப்புறக்கணிப்பு நேற்று காலை 7 மணியுடன் நிறைவடைந்தது.

பாதீட்டின் ஊடாக தங்களுக்கான கொடுப்பனவுகளை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் உள்ளிட்ட விடயங்களுக்கு தீர்வு கோரி 18 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் காலை 7 மணிமுதல் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

கலந்துரையாடல் மூலம் தங்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முற்பட்ட போதிலும் அதற்குரிய தீர்வு கிடைக்கவில்லை எனச் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தங்களது பிரச்சினைகளுக்குரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் சகல சுகாதார தொழிற்சங்கங்களையும் இணைத்துக்கொண்டு நாடளாவிய ரீதியில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஙி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 100 | 180 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 500 | 650-700 | 800 |
| தக்காளி | 200 | 180 | 250 | 150-200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200-250 | 200 |
| கோவா | 280 | 250 | 300 | 230 | 350 |
| கரட் | 700 | 600-750 | 800 | 600 | 800 |
| பூசணி | 120 | 120 | 140 | 80-120 | 160 |
| புடோல் | 150 | 180 | 150 | 140 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-250 | 300 | 150-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 180 | 140 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 600 | 500 | 350 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 250-300 | 350 |
| கருணைக் கிழங்கு | 180 | 250 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 100 | 100-130 | 250 |
| லீக்ஸ் | 350 | 250 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 400-500 | 600 |
| முருங்கைக்காய் | -- | 2000 | 1500 | 2000 | 3000 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 70 | 100 | 150 | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 60-70 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 150-180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 150-250 | 220-260 |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 220 | 250 | 200 | 100-200 | 200 |
| முள்ளங்கி | 100 | 180 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 344



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பிறருக்காக...!

அந்தக் காலத்திலே எத்தனையோ முனிவர்கள் நாட்டிலே இருந்தார்கள். அதிலே கனதர் எனும் ஒரு ரிஷி.

அவரிடம் பலபேர் வருவதுண்டு உபதேசம் வாங்கிக் கொண்டு போவதற்கு. ஒரு நாள் அவரிடம் நான்கு பேர் வந்தார்கள்.

முனிவர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார். நாளைக்கு காலையில் சூரியன் உதயமாகும் சமயத்தில் இங்கே வாருங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார்.

சரி என்று சொல்லிவிட்டு போனார்கள். அடுத்த நாள் காலையிலே முனிவர் சொன்ன நேரத்திற்கு வந்தனர்.

அந்த சமயத்தில் முனிவர் ஒரு பெரிய யாகம் செய்து கொண்டிருந்தார். வந்த நான்கு பேரும் அதைப் பார்த்ததும் அவருக்கு ஒத்தாசை செய்ய ஆரம்பித்தனர்.

யாகம் முடிவதற்கு மிகவும் நேரம் ஆகிவிட்டது. இந்த நான்கு பேரும் காலையிலே வந்தவர்கள் இதுவரைக்கும் சாப்பிடவே இல்லை.

பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தனர்.

சரி நமது வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு மறுபடியும் வருவோம் என்று புறப்பட்டார்கள்.

முனிவர் அவர்கள் புறப்படுவதைப் பார்த்தார். உடனே தடுத்து நிறுத்தினார். நீங்கள் எதற்கு வீட்டிற்குப் போக வேண்டும் இங்கே ஆச்சிரமத்திலே சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆச்சிரமத்திற்குச் செல்லுங்கள் நான் பின்னால் வருகிறேன் என்றார்.

இதைக் கேட்டவுடன் அந்த நான்கு பேரும் ஆச்சிரமத்திற்கு போனார்கள்.

அங்கே வாசலிலே ஒரு பெரிய பாத்திரத்திலே தண்ணீர் வைத்திருந்தார்கள். இவர்கள் கை, கால்களைக் கழுவிவிட்டு உள்ளே நுழையப் போனார்கள்.

அந்தச் சமயம் பார்த்து அங்கு இருந்த நான்கு முரட்டு ஆசாமி அவர்கள் முன்னால் வந்து நின்றார்கள்.

இங்கே சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. என்ன தெரியுமா? இதோ இருக்கிறதே பாருங்கள். இந்த மூங்கில் சிம்புகளை உங்கள் முழங்கையிலே வைத்து கட்டுவோம்.

அதற்கு நீங்கள் சம்மதிக்கவில்லை என்றால் உங்களைக் கொன்று விடுவோம் என்றார்கள்.

அதற்கு பிறகு இவர்கள் என்ன வேண்டாம் என்றா சொல்ல முடியும்?

பயந்து கையை நீட்டினார்கள். அவர்கள் மூங்கில் சிம்பை வைத்து கட்டினார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் கையை மடக்க முடியவில்லை. அப்படியே உள்ளே போனார்கள் நான்கு இலை எதிரும் புதிருமாகப் போட்டிருந்தது. அதிலே பலகாரம் எல்லாம் வைத்திருந்தது.

இலைக்கு முன்னால் உட்கார்ந்தார்கள். இருந்தாலும் எப்படி சாப்பிட முடியும்? அதுதான் கையிலே சிம்பு வைத்து கட்டி விட்டார்கள்.

முழங்கையை மடக்க முடியவில்லை. இந்தச் சமயத்திலே முனிவர் உள்ளே வந்தார். என்ன இது? ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்து இருக்கிறீர்கள். கூச்சப்படாமல் சாப்பிடுங்கள் என்றார்.

முழங்கையை மடக்க முடியவில்லை எப்படி சாப்பிடுவது என்றனர். இதைக் கேட்டதும் முனிவர் சிரிக்க அவர்களைப் பார்த்து சொன்னார்.

இதோ பாருங்கள் உங்கள் கையிலே இருக்கும் லட்டு உங்கள் வாய்க்குள் தான் போகவேண்டும் என்று அவசியம் இல்லை. அந்த லட்டு எதிரில் உள்ளவர் வாய்க்கும் போகலாம். அதேபோல் இருக்கிறவர் கையில் இருக்கின்ற லட்டு எதிரிலே இருப்பவரின் வாயிலும் போகலாமே என்றார்.

அப்போது தான் இவர்களுக்கு புத்தி வந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவர் சாப்பிட அது உபயோகப்படும் என்பது புரிந்தது.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கிறவர். இந்த கதையைக் கேட்டவுடன் சொன்னார்.

சேர் எனக்கு எல்லாம் கையிலே மூங்கில் சிம்பு வைத்துக் கட்ட வேண்டிய அவசியமே ஏற்படாது. ஏனென்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை என்றார்.


அது எப்படி என்று கேட்டார்.

நான் எப்போது அடுத்தவர் பையிலே இருக்கும் பணத்தைத்தான் எடுப்பது வழக்கம் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடைந்த நிலையில் பேருந்து நிலைய இருக்கைகள்

## பயணிகள் அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலைய இருக்கைகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதனால் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புதிய பேருந்து நிலையத்தில் காணப்படும் இருக்கைகள் உடைந்து, பழுதடைந்து காணப்படுவதால் நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் குறித்த இருக்கையில் அமரும் போது உடலில் காயங்கள் ஏற்படுவதாகவும் இருக்கைகளில் இருந்து விழ வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும் பல மாவட்டங்களில் வந்து செல்வோர் அதிகமாக கூடும் இடமாகவும் உள்ள குறித்த பேருந்து நிலையத்தின் இருக்கைகளே இவ்வாறு உடைந்து காணப்படுகின்றமையால் பயணிகள் அசௌரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இருக்கைகளை சீர் செய்ய வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8)

# அன்னை பூபதியின் நினைவேந்தல் வாரம் மட்டக்களப்பில் நேற்று ஆரம்பம்

(மட்டக்களப்பு)

இந்திய இராணுவத்தினை வெளியேறக் கோரியும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசை பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு கோரியும் உண்ணா நோன்பிருந்து உயிர்நீர்த்த அன்னை பூபதியின் நினைவேந்தல் வாரம் நேற்று மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் நினைவுத்தூபியில் நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது நினைவுத் தூபியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி 8 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அன்னை பூபதியம்மா மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலய முன்றிலில் மார்ச் 19 ஆம் திகதி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு ஏப்ரல் 19 ஆம் திகதி உயிர் நீத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)




# வேட்பு மனுக்களை முல்லையில் கையளித்த தமிழரசு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசுக்கட்சி மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வேட்பு மனுப் பத்திரங்களை நேற்று கையளித்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுப் பத்திரங்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கையெழுத்திட்ட கரைதுறைப்பற்று, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்குரிய வேட்பு மனுப் பத்திரங்களை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரன் கையளித்தார்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் மற்றும், உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)




ஜானுஷ்





நதுர்சா

பெண்: ஹலோ ஆம்புலன்ஸ் சர்வீசா?
ஊழியர்: ஆமா மேடம் என்னாச்சு?
பெண்: காபி குடிக்கும்போது கை தவறி காபி என் புது சாரியில கொட்டிடுச்சு..
ஊழியர்: மேடம்.. இதுக்கெல்லாம் போயி கூப்பிடுறீங்க? அம்புலன்ஸ் எதுக்கு என்று தெரியாதா?
பெண் அதெல்லாம் தெரியுமுங்க! சாரில காபி கொட்டினதும் என் புருஷன் கொஞ்சம் சத்தமா கைகொட்டி சிரிச்சாரு
ஊழியர்: ஓகே.. ஓகே.. புரியுது மேடம்.. இதோ உடனே வருகிறோம்.. நீங்க அட்ரச சொல்லுங்க...

சர்ஜன்




இமாத்




வந்திதா




உதிர்ஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 728





அதற்குப் பிறகு அவள் தந்தை முன்னால் வருவதே இல்லை. இப்படி ஒரு நாடகம் நடத்தினால் ஏதாவது உண்மை கண்டறியலாம் என்று செய்திருக்கிறாள். "தெரிந்திருக்குமா, அக்கா?"

அதை நான் அறியேன்! நந்தினியின் உள்ளத்தை அவளைப் படைத்த பிரம்மதேவனாலும் கண்டறிய முடியாது. பழுவேட்டரையர் அவளிடம் படும்பாட்டை நினைத்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. தம்பி! சற்று முன் அழகைப் பற்றிப் பேசினோம் அல்லவா? பெண்களில் அழகி என்றால் நந்தினி தான் அழகி. நாங்கள் எல்லோரும் அவள் கால் தூசி பெற மாட்டோம். நந்தினி முன்னால் எதிர்ப்பட்ட புருஷர்க

ளும் அவளுக்கு அக்கணமே அடிமையாகி விடுகிறார்கள். பழுவேட்டரையர், மதுராந்தகர், திருமலையப்பன், கந்தன்மாறன், கடைசியாக பார்த்திபேந்திரன்! அவளுடைய அழகுக்குப் பயந்து கொண்டு முதன் மந்திரி அநிருத்தர் அவள் பக்கத்திலேயே போவதில்லை. ஆதித்த கரிகாலன் அதனாலேயே தஞ்சைக்கு வருவதில்லை. தம்பி! நந்தினியின் சௌந்திரயத்துக்கு அஞ்சாமல், அவளிடம் தோற்றுப் போகாமல் மிஞ்சி வந்தவர், ஒரே ஒருவர் தான்"

"வாணர் குலத்து வீரரைத் தானே சொல்லுகிறாய்?" "ஆம்! அவர்தான்! அதனாலேயே அவரைக் காஞ்சிக்கு ஆதித்த கரிகாலனிடம் அனுப்பியிருக்கிறேன்." "எதற்காக?"

"பழுவூர் ராணி கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி நம் தமையனுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறாள். அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பதற்காக அனுப்பியிருக்கிறேன். அப்படிச் சந்தித்தாலும், விபரீதம் எதுவும் நேராமல் பாதுகாப்பதற்கு அனுப்பியிருக்கிறேன். கரிகாலனுக்கு நந்தினி தம் தமக்கை என்று தெரியாது. நந்தினி நம் உறவைக் கண்டு கொண்டாளா என்பதையும் நான் அறியேன்."

"அவள் நம் தமக்கை என்பது நிச்சயந்தானா, அக்கா?"

"அதில் என்ன சந்தேகம்? தம்பி! அதை நான் அறிந்ததிலிருந்து என்னுடைய மனதை அடியோடு மாற்றிக் கொண்டு விட்டேன். நாம் குழந்தைகளாயிருந்த போது நந்தினியை நான் வெறுத்தேன், அவமதித்தேன். அவள் அழகைக் கண்டு பொறாமைப்பட்டேன். நீயும், கரிகாலனும் அவளோடு பேசவுங் கூடாது என்று திட்டம் செய்தேன். அவள் பாண்டியநாட்டுக்குப் போன பிறகும் அவளிடம் நான் கொண்டிருந்த அசூயையும் வெறுப்பும் அப்படியே இருந்தன. பழுவூர்க் கிழாரை மணம் செய்து கொண்டு திரும்பி வந்த பிறகு எத்தனையோ தடவை அவளைப் பரிகசித்து அவமானப்படுத்தினேன். அதற்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்" "எப்படி, அக்கா! என்ன மாதிரிப் பிராயச்சித்தம்?"

"அடுத்த தடவை அவளைச் சந்திக்கும்போது அவள் காலில் விழுந்து என்னுடைய குற்றங்களையெல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வேன். அதற்காக என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக் கொள்வேன்".அதை நான் தடுப்பேன். நீ ஒரு குற்றமும் செய்ய வில்லை நீ யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. இந்த ஈரேழு பதினாலு உலகத் தில் உனக்குத் தண்டனை கொடுக்கக் கூடியவர்கள் யாரும் இல்லை.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## விறகு வெட்டியின் துணிச்சல்

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தச் சிங்கம் இனி மேல் வேட்டையாடவில்லை என்றால் நாம் இருவரும் பட்டினியால் இறந்து விடுவோம் என்று நரி வருத்தத்துடன் கூறியது.



"நீ சொல்வது சரியே !" என்ற காகம் "சிங்கத்திற்கு என்னவாயிற்று என்பதை அறிய நாம் முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறியது.

மறுநாள் அவை இரண்டும் சிங்கத்தைச் சற்று இடைவெளிவிட்டுப் பின் தொடர்ந்தன. விறகு வெட்டி கொண்டு வந்த உணவைச் சிங்கம் உண்பதைக் கண்டன.

"ஓ, இந்தக் காரணத்தால்தான் சிங்கம் இப்போதெல்லாம் வேட்டையாடப் போவதில்லையா ?" என்று நரி கூறியது.

தொடர்ந்து, "சிங்கம் அதனுடைய உணவை நம்முடன் பகிர்ந்து கொள்ளும்படியாக நாம் செய்ய வேண்டும். பிறகு, விறகு வெட்டியுடன் அதற்கு இருக்கும் நட்பை நாம் முறிக்க வேண்டும்.

அப்படிச் செய்தால், சிங்கம் மறுபடியும் இரையைத் தேடி வேட்டையாடத் தொடங்கும்" என்று திட்டம் தீட்டியது வஞ்சகத்துக்குப் பேர் போன நரி.

அன்று மாலை சிங்கம் அதன் குகைக்குத் திரும்பியபோது காகமும் நரியும் அதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தன.

"தலைவரே, எங்களை ஏன் மறந்துவிட்டீர்கள் ? முன்பு போல நாமெல்லாரும் ஒன்றாக வேட்டையாடச் செல்வோமே" என்று காகமும் நரியும் சிங்கத்திடம் கவலையாகக் கேட்டுக் கொண்டன.

"இல்லை. நான் ஒரு நண்பனைச் சந்தித்தேன்.அதன் பிறகு என் பழைய வழக்கத்தை மாற்றிக் கொண்டுள்ளேன். இப்போது நான் மாமிசம் சாப்பிடுவதை அறவே ஒழித்து விட்டேன்" என்று அவர்களுக்குச் சிங்கம் பதிலளித்தது.

"அப்படியானால் உங்களுடைய நண்பனை நாங்களும் சந்திக்கலாமா?" என்றது காகம்.

மறுநாள் விறகு வெட்டி சிங்கத்தின் வருகைக்காகக் காத்திருந்தான். திடீரென்று புதிய குரல்கள் கேட்டன. விறகு வெட்டி எந்நேரமும் கவனமாக இருப்பான், புத்திசாலியும் கூட.

உடனே அவன் உயரமான ஒரு மரத்தின் மீது ஏறினான். தொலைவில் சிங்கம் வருவதைக் கண்டான். அதனுடன் ஒரு காகமும் நரியும் வந்து கொண்டிருந்ததையும் பார்த்தான். அவை இரண்டும் உடன் வருவதால் சிங்கத்தோடு எனக்கு ஏற்பட்டிருக்கும் நட்பு அதிக நாட்களுக்கு நீடிக்காது என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

சிங்கம் மரத்தின் அருகில் வந்து விறகு வெட்டியைக் கூப்பிட்டது. "கீழே இறங்கி வந்து எங்களுடன் சேர்ந்து கொள். உன்னுடைய நண்பனான நான் வந்திருக்கிறேன்" என்று சிங்கம் அவனை அழைத்தது.

"நீங்கள் என்னுடைய நண்பனாக இருக்கலாம். ஆனால், நீங்கள் எனக்கு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டீர்கள். நீங்கள் உறுதிமொழியை மீறும் படியாக அவர்கள் இருவரும் செய்துள்ளார்கள். அப்படியானால் நீங்கள் என்னைக் கொல்லும் படியாகவும் அவர்களால் செய்ய முடியும். அதனால் நம்முடைய நட்பை நீங்கள் மறந்து விடுவதே சிறந்தது" என்று தைரியத்துடன் விறகுவெட்டி சிங்கத்திடம் கூறினான்.

நீதி : துணிவும் விவேகமும் உயிரைக் காக்கும் !

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகாரத் துஷ்பிரயோகங்களுக்கு வழங்கப்படும் தண்டனை யாது?

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த பெண்ணொருவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய உத்தரவு செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தவிர, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, மரண தண்டனைக் கைதியாக இருந்த ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை செல்லாது என்ற தீர்ப்பையும் உயர்நீதிமன்றம் ஏலவே வழங்கியிருந்தது.

ஜனாதிபதி என்ற ஆட்சிப் பதவியில் இருந்து கொண்டு, தனக்கு இருக்கக்கூடிய அதி காரத்தை கோட்டாபய ராஜபக்ஷ துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பது உறுதியாகிறது.

ஆக, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முரணாகச் செயற்பட்டார் என்பதை உயர்நீதிமன்றம் உறுதி செய்யும்போது, கோட்டாவுக்கான தண்டனை என்ன என்ற கேள்வி எழவே செய்யும்.

உண்மையில், ஆட்சித் தலைவர்கள் உட்பட அரச உயர் அதிகாரிகள் வரை, அவர்கள் தமக் கான அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய் யும்போது, அது தொடர்பில் கடுமையான தண் டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண் டும்.

இவ்வாறு கடும் தண்டனைகள் வழங்கப்படும் போதுதான், சட்டவரையறைகளுக்குள் நின்று கொண்டு தமது கடமையைச் செய்ய வேண்டும் என்ற நினைப்பு அவர்களிடம் ஏற்படும்.

உண்மை. பத்திரிகையாளர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த ஒருவருக்கு, ஜனாதிபதியாக சிறிது காலம் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்குகிறார்.

அவர் வழங்கிய பொதுமன்னிப்பு என்பது, குற்றம் பெற்றவர் மீது ஜனாதிபதி கொண்டிருந்த தனிப்பட்ட நட்புக்காக வழங்கப்பட்டதென்பது தெரிந்த விடயம்.

குற்றவாளி தொடர்பில் உயர்நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டு ஆதாரபூர்வமான சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கும்போது, எழுந்தமானமாக ஜனாதிபதி என்ற அதிகாரத்தினூடு பொதுமன்னிப்பு வழங்கப்படுமாயின், ஆட்சித் தலைவரின் அணைவு இருந்தால் எவரையும் கொலை செய்யலாம். அவ்வாறு கொலை நிருபிக்கப்பட்டு மரணதண்டனை கிடைத்தாலும் ஜனாதிபதி பொது மன்னிப்புத் தருவார் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டால், அதன் பின்னர் நீதிமன்றங்கள் ஏன்? என்பதாக நிலைமை மாறிவிடும்.

எனவே அதிகாரத் துஷ்பிரயோகங்களைச் சுட்டிக்காட்டி அவை செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கப்படுகின்ற அதேநேரம், அதிகாரத்தை மீறியமைக்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு கடும் தண்டனை வழங்குகின்ற ஏற்பாடுகளும் அவசியம் தேவை.

# கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இராமேஸ்வரம் மீனவர் கைது விவகாரம்

## ● மீண்டும் ஜெய்சங்கருக்கு கடிதம் வரைந்தார் ஸ்டாலின்

(சென்னை)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அண்மித்த பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விவகாரம் தமிழகத்தில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்கள் உட்பட இலங்கைச் சிறைச்சாலையிலுள்ள ஏனைய இந்திய மீனவர்களையும் விடுவிக்க ஆவண செய்யுமாறு கோரி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க வலுவான தூதரக முயற்சிகள் தேவையென பலமுறை தம்மால் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் இது போன்ற கவலையளிக்கக்கூடிய சம்பவங்களின் எண்ணிக்கை தொய்வின்றி அதிகரித்து வருவகிறது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் சிறைப்பிடிக்கப்படுவதால் அவர்களது குடும்பத்தினர் வறுமையின் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய முதல்வர்,

தமிழக மீனவர்கள் மேலும் கைது செய்யப்படாமல் தடுக்கவும் இலங்கையில் சிறையிலடைக்கப்பட்டுள்ள 110 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க வலுவான இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மீண்டும் வலியுறுத்தினார். (ம-7)

# பட்டலந்தவால் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு புதிய சிக்கல்

## பதறுகிறார் சரத் வீரசேகர

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பட்டலந்த அறிக்கையை முன்னிறுத்தி வடக்கில் இனப்படுகொலை நடந்ததாகக்கூறி, அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழுவொன்றை தமிழ் டயஸ்போராக்கள் கோரக்கூடும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கை படையினர் போர்க்குற்றம் இனப்படுகொலையும் நிகழ்த்தவில்லை. உலகிலேயே பெருமளவில் பணயக் கைதிகளை மீட்டு போரை முடித்த இராணுவம்தான் எமது நாட்டில் உள்ளது.

எனவே, போர்க் குற்றம் மற்றும் இனப்படு கொலை தொடர்பில் எமக்குள்ள குற்றச்சாட்டுகள் போலியானவை யாகும். எனினும் குற்றச்சாட்டுகள் உண்மையென்பதை காண்பிப்பதற்கு, பட்டலந்த அறிக்கை பயன்படுத்தக் கூடும்.

பட்டலந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படின் வடக்கிலும் இதுபோன்ற இனப்படுகொலை நடந்தது எனக்கூறி, அது தொடர்பில் டயஸ்போராக்கள் விசாரணை கோரலாம். ஜெனிவாவில் கூட பட்டலந்த அறிக்கை இலங்கைக்கு எதிராக எதிரொலிக்கக் கூடும் என்றார். (ம-7)

# கள்ளமண் டிப்பரை காத்த மகிழுந்து

## சாவகச்சேரியில் சம்பவம்

இரவில் மணல் அகழ்தல் பரிமாற்றத்தில் ஈடுபடுதல் என்பனவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் தர்மபுரம் கல்லாறு பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பரை சாவகச்சேரி பொலிஸார் துரத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது பொலிஸாரது வாகனத்திற்கும் மணல் ஏற்றி வந்த டிப்பரிற்கும் இடையில் வீதிக்குக் குறுக்காகத் தொடர்ந்து பயணித்த மகிழுந்து ஒன்று, பொலிஸார் குறித்த டிப்பரினை நெருங்குவதற்கு இடமளிக்காது டிப்பரை தப்பிக்க வைக்க முயற்சித்துள்ளது.

இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி குறித்த டிப்பரானது மணலை பிரதான வீதியில் கொட்டி விட்டுதப்பிச்சென்றுள்ளது.

இந்நிலையில் தப்பிச்சென்ற டிப்பர் மற்றும் மகிழுந்து ஆகியவற்றின் பதிவிலக்கங்கள் அடிப்படையில் உரிமையாளர்களைக் கைது செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## உதவி வழங்கும் போர்வையில்

# அத்துமீறிய யூரியூப்பருக்கு மீண்டும் மறியல் நீடிப்பு

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றிற்கு உதவி வழங்கும் போர்வையில் அநாகரிகமாக செயற்பட்ட யூரியூப்பரின் விளக்கமறியல் காலத்தினை மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்று மீண்டும் நீடித்துள்ளது.

கடந்த 9ம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் விசாரணைகளின் பின் மறுநாள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, யூரியூப்பர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்த போதிலும் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மன்று அவரை அடுத்த மாதம் 02 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ம-7)

## அடிப்படை உரிமை மீறல் தொடர்பான

# மகிந்தவின் மனுவை நிராகரித்தது மன்று

(கொழும்பு)

தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

முறையான மதிப்பீடின்றி தனது பாதுகாப்பு குறைக்கப்பட்டதால் தமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது என உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்ட மா அதிபர் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அமைச்சரவை மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட 29 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி தனது பாதுகாப்புக்காக கடமையிலிருந்த சுமார் 60 பேர் தவிர்ந்த ஏனையோர் நீக்கப்பட்டதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம் அதனை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்போவதில்லை என தெரிவித்து மனுவை தள்ளுபடி செய்தது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)

## கொடுத்த வாக்கை காப்பாற்றும் ரிஷப ராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**ரிஷபம்:** 'வாக்கே வாழ்வு' என்ற கூற்றுப்படி எடுத்த காரியத்தையும், கொடுத்த வாக்கையும் காப்பாற்றும் ரிஷப ராசி நேயர்களே! பணப்புழக்கம் தங்களிடம் தட்டுப்பாடின்றி இருக்கும். உங்களது உழைப்பால் மற்றவர்களை வாழ வைப்பீர்கள்.

யார் உங்களிடம் வாக்கு கொடுத்தாலும் அதன்படி அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால் உங்களுக்கு கோபம் வரும். ஏனென்றால் நீங்கள் தன்மானம் நிறைந்தவர்கள். எந்த சூழ்நிலையிலும் அடுத்தவர் மனம் புண்படாதபடி பேசுவதில் வல்லவர் நீங்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**கிரகநிலை:** இதுவரை உங்களது தொழில் ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி இலாப ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் ராசியையும் , ஏழாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** இந்த சனிப்பெயர்ச்சியில் தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இதனால் உங்களின் செயல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாமலும் போகும். அதே நேரம் பல சாதகமான நிலைமைகளும் வர இருக்கிறது. உங்களின் வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவார். செலவுகள் அதிகரிக்கும் என்பதால் அவற்றை ஈடுகட்ட பழைய கடன்களை வசூலிப்பீர்கள். நீங்கள் விரும்பிய வீட்டிற்குக் குடிபெயர்வீர்கள். சுகபோக வசதிகளை அனுபவிப்பீர்கள் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

உடல் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். அனைத்துச் செயல்களையும் பொறுமையுடனும், நிதானத்துடனும் செய்ய வேண்டும். உங்களின் ஆலோசனைகள் உங்களுக்குப் பயன்படுவதை விட மற்றவருக்கு பயன்படும். நீரிழிவு நோய் மற்றும் கல்லீரல் நோய் போன்றவை உள்ளவர்கள் கூடுதல் கவனத்தோடு இருக்கவும். மது உள்ளிட்ட போதைப் பழக்கங்கள் உள்ளவர்கள் அதை விடுவதே சிறந்தது. உங்கள் மனதில் அவ்வப் போது தைரியமின்மையைத் தோற்றுவிப்பார். இதனால் அனைத்துச் செயல்களிலும் சந்தேகத்தோடு ஈடுபடுவீர்கள். மற்றபடி உடல் பொலிவடையும்.

உங்களை ஏமாற்ற நினைக்கும் நண்பர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்வீர்கள். அதிகம் கவலைப்படத்தேவையில்லை. புதிய முயற்சிகளில் இறங்கி அனுபவம் பெறுவீர்கள். சிரமம் பார்க்காமல் சாகசங்களில் ஈடுபடுவீர்கள். வருமானம் சீராக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்துவீர்கள். சிலர் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பார்கள். உங்களின் முக்கிய திட்டங்கள் நிறைவேறும். இதனால் உங்கள் ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

தொழிலில் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கி முன்னேற்றகரமான திருப்பங்கள் உண்டாகும். கடன்களைத் திருப்பி அடைத்து புதிய சேமிப்புகளிலும் ஈடுபடுவீர்கள். நேர்முக மறைமுக எதிர்ப்புகள் மறையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளை மேலதிகாரிகள் உடனுக்குடன் பரிசீலிப்பார்கள். அலுவலகத்தில் அனுகூலமான சூழலைக் காண்பீர்கள். சக ஊழியர்கள் நட்பு பாராட்டுவார்கள். இடையூறுகளை ஒரு பொருட்டாகவே கருதமாட்டீர்கள். பணவரவில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் எந்தக் குறையும் ஏற்படாது. விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவீர்கள். உங்கள் வேலைத் திறன் பளிச்சிடும்.

வியாபாரிகளின் திட்டங்கள் அனைத்தும் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் சிறப்புகள் உண்டாகும்.




விற்பனைப் பிரதிநிதிகளைப் பல சந்தைகளுக்கும் அனுப்பி உங்கள் விற்பனைக் களத்தைப் பரவலாக்குவீர்கள். ஆயினும் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே விரிவாக்கம் செய்யவும். மற்றபடி திறமையுடன் நீங்கள் செய்து வரும் வியாபாரத்தால் உங்கள் கௌரவமும், அந்தஸ்தும் உயரும்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். எதிரிகளால் கஷ்டங்கள் உண்டாகாது என்றாலும் அவர்கள் மீது ஒரு கண் வைத்திருக்கவும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும். சச்சரவுகளில் சம்பந்தப்பட்டு மாட்டிக் கொள்ள வேண்டாம்.

கலைத்துறையினர் கடினமாக உழைத்தால் துறையில் வெற்றிவாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து விடுவீர்கள். உங்கள் திறமைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். அதேசமயம் உங்களின் வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களில் மிகவும் கவனத்துடன் இருக்கவும். சககலைஞர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

பெண்கள் நன்கு யோசித்த பிறகே பிறரின் வார்த்தைகளை நம்ப வேண்டும். கணவரிடமும் குடும்பத்தாரிடமும் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். எவரிடமும் மனம் திறந்து பேச வேண்டாம். உங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றவும்.

மாணவர்கள் கடினமாக உழைத்துப் படிப்பதன் மூலம் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். சிலருக்கு வெளியூர் சென்று கல்வி பயிலும் வாய்ப்பு கிடைக்கும். மனக்குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். தீய நண்பர்களுடனான நட்பைத் துண்டிப்பீர்கள். உள்ளரங்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு சாதனை செய்வீர்கள்.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும்.

**ரோகினி:** தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஓடர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவார்கள்.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்:** குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின்போதும் கூடுதல் கவனம் தேவை.

**பரிகாரம்:** முடிந்தால் திருப்பதி சென்று பெருமாளை தரிசனம் செய்து விட்டு வரவும். கோளாறு திருப்பதிகத்தை அன்றாடம் பாராயணம் செய்வது. தாமரை மலரை பெருமாளுக்கு சாத்திவர பொருளாதார நிலைமை உயரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதனார்...

இதில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த கதிரவேலு கந்தசாமி (வயது -69) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 8.00 மணியளவில் மேற்படி நபர் மானிப்பாய் - கைதடி வீதியூடாக துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை (19) காலை துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## உளவியல்...

ழந்துள்ளார்.

கயந்தவும் அவரது குடும்பத்தினரும் யாழ்ப்பாணம் நயினாதீவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டு வாடகைக்கு எடுக்கப்பட்ட வானில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மீரிகமவிலிருந்து குருநாகல் நோக்கி சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள போயவாலன் அருகே சிமெந்து ஏற்றிச் சென்ற பாரவூர்தி, வான் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## பொலிஸாரைத்...

நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தெல்லிப்பழை பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்குச் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த சந்தேகநபர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து, பொலிஸார் மீது கொட்டனால் தாக்குதல் நடத்தியுள்ளார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33)

## நீதிமன்றில்...

எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் பல நாட்களாக தலைமறைவாகியிருந்த தேசபந்து தென்னகோன் நேற்று சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மே 8வரை...

காரணமாக இன்று 20ஆம் திகதி முதல் மே 8ஆம் திகதிவரை நடைபெறும் பாராளுமன்ற அமர்வுகளில் அர்ச்சுனா எம்.பியின் உரைகளை நேரடியாக ஒளிபரப்புவதற்குத் தடைவிதிக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்றத்தை அவமதிக்கும் அர்ச்சுனா எம்.பியின் அநாகரிகமான கருத்துக்களும் ஹன்சார்ட் பதிவுகளிலிருந்து நீக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## தேர்தலுக்கான...

ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மொத்தமாக 21 கட்சிகளும் 15 சுயேட்சைக் குழுக்களும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், அவற்றை முன்வைக்க ஒன்றரை மணி நேரம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்த பிறகு, பேரணிகளை அல்லது வாகனப் பேரணிகளை நடத்துவது தேர்தல் சட்டத்தின் கீழ் முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கை நிறைவடைந்த நாளிலிருந்து 35 அல்லது 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அரசாங்கத்தின் பாதையை சீர்குலைப்பதற்குச் சதி

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாதையை சீர்குலைப்பதற்குச் சதி மேற்கொள்ளப்படுவதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மருதானை சி.எஸ்.ஆர் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அகில இலங்கை சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, தொழிற்சங்க பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டுக்காகப் பணிபுரியும் சுயவிருப்பத்துடன் முன்வரும் சுகாதார ஊழியர்களுடன் இணைந்து அரசாங்கம் என்ற ரீதியில் பொதுமக்கள் சார்பாக நின்று, அவர்கள் எதிர் பார்க்கும் சுகாதார சேவைகளை வழங்க தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம்

இப்பணியை முன்னெடுப்பதில் எவ்வாறான தடைகள் எழுந்தாலும், மக்கள் அரசாங்கத்துடனே இருப்பார்கள். அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை இருக்கும்வரை பிற்போக்குவாதிகளை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. நாடு மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாட்டின் சுகாதார சேவையை தேசிய அளவில் கட்டியெழுப்ப தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஆரோக்கியமான நாட்டை உருவாக்க சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி முதல் கீழ்நிலை அதிகாரி வரை அனைவரின் பங்களிப்பும் அவசியம் என்றார். (ம-7)

## நீதி...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல் தமிழர்கள் மீதான வன்முறைகள் தொடர்பிலும் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

கடந்த 80 வருடங்களாகத் தமிழர்கள் மீது பல்வேறு சந்தர்ப்பங்களில் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இறுதி யுத்தத்தின் போதும் பொதுமக்கள் பலர் உணவின்றி பட்டினியால் கொல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்தும் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 5780 — E 8 6 1 1 7 9
அத சம்பத — E 1 1 7 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0355
தன நிதானய — திகதி 2025.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1810 — X 14 15 66 77 X — 15700
மெகா பவர் — திகதி 19/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2128 — C 24 08 42 52 71
ஜய ஜய — திகதி 2025.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 048 — Z 7 5 8 9
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4022 — சீட்டிழுப்பு திகதி 19.03.2025 — J 36 40 43 54 — J
ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.03.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1089 — தனுசு 17 35 46 62 தனுசு — 43298 — 39
சுப்பர் மில்லியன் — 19.03.2025 — வெற்றி வாரம் 488 — X 3 0 1 9 4 1 — 77669 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,834,747.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2754 — சீட்டிழுப்பு திகதி 2025.03.19 — தினம் புதன்கிழமை — 39 63 65 75 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.93,267,869.60
சனிதா — திகதி 19.03.2025 — வெற்றி வாரம் 4915 — 15 26 63 78 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,455,165.20 — 82690
ஜயோதா — திகதி 2025.03.19 — வெற்றி வாரம் 2113 — 13 24 26 30 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,479,680.00
லக்ன — சீட்டிழுப்பு வாரம் 4466 — சீட்டிழுப்பு திகதி 19.03.2025 — தினம் புதன்கிழமை — 24 30 41 57 — மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,241,865.60 — 276193
கப்ருக — V 31 03 08 29 70 — 1930 — 19.03.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,015,455.00
அட கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2580 — சீட்டிழுப்பு திகதி : 2025.03.19 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00 — 04 28 48 61 J — 567582


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம்
01 . 01 . 1956

மறைவு
01 . 04 . 2024

## அமரர் சின்னத்தம்பி அருச்சுனன்

அன்பின் கணவனாய்
பாசமுள்ள தந்தையாய்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
ஆண்டொன்று ஆனதுவோ
அவனிவிட்டு நீங்கள் சென்று
ஆறாது தவிக்கின்றோம்
உங்கள் ஞாபகத்துடன்..

எங்கள் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு நாளை 21.03.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

டாக்டர் சுப்ரமணியம் வீதி,
சுன்னாகம்.

(935)

தகவல் :
குடும்பத்தினர்


## கொக்குவில் கிழக்கில் காணி விற்பனைக்கு

கொக்குவில் நந்தாவில் வீதியில் 1.2 பரப்பு மற்றும் 2.25 பரப்பு காணிகள் சுற்றுமதில் மற்றும் கிணற்றுடன் விற்பனைக்கு உள்ளது. விருப்பம் உள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர்கள் தேவையில்லை.

T.I.குமார்

(3698)

077 771 0785
077 979 8053

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மாவிட்டபுரம்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2501)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2500)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரதாரி தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(936)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் நகரில் 2 ½ பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :
077 261 4549

(937)


## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் 2 ¼ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு

• கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
• நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து 1.7Km

077 185 4870


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
12.10.1947

மறைவு
31.03.2024

## அமரர். தேவேந்திரன் தையல்நாயகி

*திதி : தேய்பிறை ஷஷ்டி*

அம்மா....
கருவினில் உயிர் தந்தாய்
கண்மணியாய் எமைக் காத்து நின்றாய்
ஈரைந்து மாதங்கள் எமைத் தாங்கி வலி சுமந்தாய்
உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்தாய்.

ஐந்து முத்துக்களாய் எமை அலங்கரித்து வளர்த்திட்டாய்
கல்வியோடு ஒழுக்கத்தை கண்ணியமாய்க் காத்திட்டாய்
காலமெல்லாம் எம் நல்வாழ்வு சிறந்திடவே
கடவுளை தினமும் யாசித்தாய்.

உதிரம் கொடுத்தே எம் வாழ்விற்கு உயிர்கொடுத்தாய்
வாழ்வில் நாம் உயர்ந்திடவே எம்மிடமிருந்து விடைபெற்றாய்
நீங்கா நினைவுகள் எம் நெஞ்சில் நிழலாடுகின்றது
பாவிகள் நாம் உமை இழந்து பரிதவிக்கின்றோம்.

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - அம்மா
உம் அன்புருவம் நெஞ்சங்களிலிருந்து நீங்கவில்லை
நித்தியமாய் உம் ஆன்மா இறைவன் தாள் சேர்ந்திடவே
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*ஈர விழிகளுடன்*
குடும்பத்தினர்

(932)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org